

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர்.சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு சிலை நிறுவ தகுதியான இடத்தை தேர்வு செய்யும் பொருட்டு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆய்வு செய்தார். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாரமன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் கனிமொழி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருத்தணி நகர கழக செயலாளர் வி.வினோத் குமார், மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### அ.சாந்தகுமார் தலைமை! ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. -கலாநிதி வீராசாமி எம்.பி.-ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ. -எஸ்.ஜோயல் பங்கேற்பு !

## இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

### கரூர் முரளி-குமரி பிரபாகரன்-மு.மு.முஸ்தாக் சிறப்புரை ! ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. – வ.பெ.சுரேஷ் முன்னிலை!

சென்னை ஜூலை: 8

சென்னை வடக்கு மாவட்டம்,இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞரின் செம்மொழி நாள் மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் இன்று (8.7.2025 செவ்வாய்க்கிழமை )மாலை 5 மணி அளவில் தாளமுத்து நடராஜன் மன்றம் அருகில் இராயபுரத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் அ. சாந்தகுமார் தலைமை வகிக்கிறார்.

ஐ ட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ,மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ்,இரா. செந்தில்குமார், லயோலா கே.மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ்,எஸ். திருஞானம், மலையம்மாள்,இ. மதன்,எஸ்.புகழேந்தி, இரா. பாலன்,எம்.ரவி, கொரியர் முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீ ஸ்வரன், இரா. பொன்முடி,எஸ். யுவராஜ்,என்.குமார், எம். பாலாஜி, ஜெய்சங்கர்,முகமது மொய்தீன்,அன்வர், பாலசுப்ரமணியன், எஸ். ரமேஷ், ரெயின்போ விஜயகுமார், சலாவுதீன்,பொன் லட்சுமி,அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கோட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் கரூர் முரளி,குமரி பிரபாகரன், மு.மு.முஸ்தாக், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி,ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் தா.இளைய அருணா,ந. மனோகரன்,பி.டி. பாண்டிச்செல்வம், இரா. வெற்றிவீரன், எஸ்.ஆர். கமலக்கண்ணன்,மு. கோபி,க. நாகம்மை, வி.தயாளன்,கி. ராஜேந்திரன், நா. சண்முகம்,வண்ணை புகாரி,வே.சிவகுமார், கீதா சுரேஷ் எம்.சி, விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி,பா.வேளாங்கண்ணி எம்.சி. உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பங்கேற்கின்றனர்.

இராயபுரம் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கா. சீனிவாசன்,வ. மொய்தீன்,கு. கௌரிநாதன்,பி. விஷால் ஆனந்த்,அ. சந்துரு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கே.கருணாகரன் தலைமையில் சி. மூர்த்தி, சி. பாலாஜி முன்னிலையில்

## மாதவரம் 17வது வட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை!

### புழல் எம். நாராயணன் துவக்கி வைத்தார்!

மாதவரம், ஜூலை 8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்க நிகழ்ச்சி நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி 17 ஆவது வட்டம் செட்டிமேடு பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் பொது மக்களிடம் திராவிடம் மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி தீவிர உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி 17வது வட்ட செயலாளர் கே.கருணாகரன் தலைமையிலும், பகுதி பிரதிநிதி சி.மூர்த்தி, வட்ட துணைச் செயலாளர் சி.பாலாஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

செட்டிமேடு பகுதியில் உள்ள பெருமாள் கோயில் தெரு, மாரியம்மன் கோவில் தெரு, சத்தியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் பொது மக்களிடம் திராவிட மாடல் அரசின் சாதனைகளான இல்லம் தேடிக் கல்வி, மக்களை தேடி மருத்துவம், இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1000, நன்மை காக்கும் 48 போன்ற சாதனைகளை எடுத்துக் கூறி மீண்டும் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தி துண்டு அறிக்கைகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

மேலும் தங்கள் பகுதிகளுக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் பொது மக்களிடம் கேட்டறிந்தனர். பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை திராவிட மாடல் அரசில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து தடையில்லாமல் வழங்கி வருகிறார்கள் என்றும், தொடர்ந்து நாங்கள் 1000 ரூபாய் பெரும் திட்டத்தில் பயன் பெறுகிறோம் எனவே எங்களது வாக்கெல்லாம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத்தான் என்று உறுதி அளித்தனர்.

பொதுமக்களிடம் உறுப்பினர் படிவத்தில் கையெழுத்து பெறப்பட்டு வீடுகள் தோறும் ஓரணியில் தமிழ்நாடு என்கின்ற வாசகம் பொரித்த ஸ்டிக்கர்களை வீடு வீடாக கழகத்தினர் ஒட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் காந்தி நகர் முன்னாள் கிளைக் கழக செயலாளர் டி.சுந்தரம், சின்னத்தோப்பு முன்னால் கிளைச் செயலாளர் ஜி முனிவேல், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத், ஜி.ராஜ்குமார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகபிரியன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கொசப்பூர் வெங்கடேசன் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சரஸ்வதி, பாக முகவர்கள் டி.திவாகர், வி.சுமிர், ஜி.கார்த்திக், எம். மோகன்ராஜ் என்கின்ற மைக்கேல், பாக இளைஞர் உறுப்பினர்கள் சஞ்சய், விஷ்ணு, மணிகண்டன், கமலநாதன், எம்.என்.தளபதி, பாக தொழில் நுட்ப அணி உறுப்பினர்கள் பூபாலன், கார்த்திக், பாக உறுப்பினர்கள் கே.சாந்தி, எஸ்.ராஜாஜி, அமலா, பரிமளா, பார்வதி, சத்யா, கீர்த்தி, வெங்கடேசன், முத்தையா, சேகர், எம். கோபால், காந்திநகர் வாசு, டி.மாதவன், சந்தோஷ், ஸ்டாலின், இ.சுதர்சன், ஜி.சுரேஷ், சின்ன தோப்பு சதீஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

செல்லும் இடங்களில் எல்லாம் பொதுமக்கள் உறுப்பினர் சேர்க்கை படிவத்தில் கையொப்பமிட்டு வரும் காலத்தில் எங்களது ஆதரவு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொடரும் என்று வாக்குறுதி அளித்தார்கள்.

## ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை

## பகுதிச் செயலாளர்கள் - வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் “ஓரணியில் தமிழ்நாடு” இணையதளம் வாயிலாக உறுப்பினர்களை சேர்ப்பது குறித்து ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொள்ளும் ஆலோசனை கூட்டம் இன்று (8.7.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணியளவில் நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எனது தலைமையில் நடைபெறுகிறது. ஆலோசனை கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக் முன்னிலை வகிக்கின்றனர். பகுதிக் கழக செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம் வரவேற்புரையாற்றுகிறார்கள். எனவே, ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட்டக்கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைகிணங்க பெரம்பூர் தெற்கு பகுதி 36( அ)வது வட்டத்தில் பாகம் எண் 66 இல் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கும் பணியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஈடுபட்டு உறுப்பினர்களை சேர்த்தார். உடன் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் ,மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர். கமலக்கண்ணன், வட்ட செயலாளர் க.பாபு, ஜி.பி.மோகன்பாபு, பிரசிடென்சி சி.சதீஷ், எம்.இ.ஷாஜகான் பொன்னரசன் மற்றும் வட்ட நிர்வாகிகள், BLA2 BDA,BLC , கழகத்தினர் கலந்து கொண்டனர்



அரியலூர் மாவட்டம், அரியலூர் மத்திய ஒன்றியம் வாலாஜா நகரத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பரப்புரையை அரியலூர் மத்திய ஒன்றிய செயலாளர் தெய்வ இளையராஜா தலைமையில் BDA , BLA2 உறுப்பினர் சேர்க்கைக்கான விளக்க கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் வளவனூர் ப.அன்பரசு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய பார்வையாளர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் தொண்டரணி முருகானந்தம் அரியலூர் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி ராஜ்குமார், அரியலூர் மத்திய ஒன்றிய அவைத்தலைவர் ஐ_முத்துசாமி, பொருளாளர் சி_செல்லதுரை மற்றும் அரியலூர் மத்திய ஒன்றிய துணை தலைவர் பழனியாண்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ஆனந்த் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 09.07.2025 | செஞ்சி கிழக்கு ஒன்றியம் | நரசிங்கராயன்பேட்டை | சேலம் கோவிந்தன்<br>இ.நேரு |
| 2 | 10.07.2025 | வல்லம் வடக்கு ஒன்றியம் | நெகனூர் புதூர் | வளவனூர் அன்பரசு<br>இ.நேரு |
| 3 | 12.07.2025 | ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் | கீழ்மாவிலங்கை | குடியாத்தம் பாரி<br>மா.குடியரசு |
| 4 | 13.07.2025 | மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் | மேல்செவலாம்பாடி | ஆம்பூர் தர்மன்<br>மா.குடியரசு |
| 5 | 14.07.2025 | வல்லம் மத்திய ஒன்றியம் | வல்லம் | குடியாத்தம் புவியரசி<br>விழுப்புரம் ச.கீர்த்தனா |
| 6 | 15.07.2025 | செஞ்சி மத்திய ஒன்றியம் | மணலப்பாடி | ஒசூர் அப்துல் ரகுமான்<br>விழுப்புரம் ச.கீர்த்தனா |
| 7 | 16.07.2025 | மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் | பெருவூர் | அதிரடி அல்தாப்<br>ச.ஐஸ்வர்யா |
| 8 | 17.07.2025 | வல்லம் தெற்கு ஒன்றியம் | கம்மந்தூர் | போடி காமராஜ்<br>ச.ஐஸ்வர்யா |
| 9 | 18.07.2025 | மரக்காணம் மத்திய ஒன்றியம் | ஏந்தூர் | விழுப்புரம்<br>ச.கீர்த்தனா |
| 10 | 19.07.2025 | மயிலம் வடக்கு ஒன்றியம் | புலியனூர் | கரூர் முரளி<br>த.இன்பக்குமரன் |
| 11 | 20.07.2025 | செஞ்சி பேரூர் | செஞ்சி | கோட்டை யமுனா |
| 12 | 21.07.2025 | ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம் | ஒலக்கூர் | சைதை சாதிக்<br>கோட்டை யமுனா |
| 13 | 22.07.2025 | மரக்காணம் மேற்கு ஒன்றியம் | வடஆலப்பாக்கம் | புதுவை இரா.கருணாநிதி<br>ச.ஷாநவாஸ் |
| 14 | 23.07.2025 | மயிலம் தெற்கு ஒன்றியம் | பாதிராப்புலியூர் | தூத்துக்குடி சரத்பாலா<br>ச.ஷாநவாஸ் |
| 15 | 24.07.2025 | மேல்மலையனூர் மத்திய ஒன்றியம் | ஆத்திப்பட்டு | சேலம் சுஜாதா<br>மு.ரோஜா |
| 16 | 25.07.2025 | செஞ்சி மேற்கு ஒன்றியம் | கடலாடிக்குளம் | ஆரணி மாலா<br>மு.ரோஜா |
| 17 | 26.07.2025 | மயிலம் மத்திய ஒன்றியம் | வீடூர் | ராஜேந்திரன் பிரசாத்<br>அப்துல் வஹாப் அதாயி |
| 18 | 27.07.2025 | மரக்காணம் கிழக்கு ஒன்றியம் | அடசல் | எட்டையாபுரம் தமிழ்ப்பிரியன்<br>அப்துல் வஹாப் அதாயி |
| 19 | 28.07.2025 | அனந்தபுரம் பேரூர் | அனந்தபுரம் | வாசு கருணாநிதி<br>த.இன்பக்குமரன் |
| 20 | 29.07.2025 | மரக்காணம் பேரூர் | மரக்காணம் | முல்லைவேந்தன் |
| 21 | 30.07.2025 | திண்டிவனம் நகரம் | திண்டிவனம் | எழும்பூர் கோபி<br>முல்லைவேந்தன் |

விழுப்புரம்

நாள் : 07.07.2025

கலைஞர் 100 1924 - 2023





தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் வட்டகழக செயலாளர் கே.ரமேஷ்பாபு ஏற்பாட்டில் 64வது வட்டத்தில் எம்.ஜி.ஆர் தெரு ஆனந்தபுரத்தில் உள்ள 141 பாகத்தில் தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் 5,வது மண்டலகுழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆலந்தூர் இப்ராஹிம் படிவத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்து பதிவு செய்து தொடங்கி வைத்தார்.இதில் பகுதி கழக நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர்கள்,வட்டச் செயலாளர்கள்,நிர்வாகிகள், இளைஞர் அணி,மாணவர் அணி,மகளிர் அணி,மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



கழகத்தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை யடுத்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் ஆலோசனைப்படி அமைச்சர் சா.மு.நாசர், பூவை சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, பூவை கிழக்கு ஒன்றிய செயலாளர் கமலேஷ் ஆகியோர் வழிகாட்டுதலின்படி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மேல்பாக்கத்தில் கிளை பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி ஜனார்தனன், திருவள்ளூர் மத்திய மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் மு.ராஜாராமன் ஆகியோர் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். இதில் அருன் ரோகித் கார்த்திக் மற்றும் கிளை செயலாளர் மே.ம.முத்து இளைஞர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.